சகோ. J. சாம் ஜெபத்துரை

வேதனைகள் தீர்கட்டும்!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

வேதனைகள் நீங்கட்டும்!

(BE WHOLE OF THY SUFFERING)

ஜி. சாம் ஜெபத்துரை

வெளியீடுபவர்
J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

முதற் பதிப்பு : அக்டோபர் 1989
விலை ரூ. 5/-

அச்சிட்டோர் :-

ஓவியம் அச்சகம்
59-A, காம்தார் நகர் II-வது தெரு
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034

அர்ப்பணம்

எனது வேதனைகளை நீக்கி
அவைகளையெல்லாம் தன்மேல்
மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்ட
என் அருமை ஆண்டவர் இயேசுவுக்கே
இந்நூல் அர்ப்பணம்!

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	வேதனைகள் நீங்கட்டும்!	5
2.	வேதனையை அறிந்திருக்கிறார்!	8
3.	வேதனை வழியா?	11
4.	சிந்தையை ஆராய்ந்து பாரும்!	14
5.	நம்மை நாமே!	17
6.	ஆராய்ந்து பாருங்கள்!	20
7.	அவர் அறிவார்!	23
8.	வெட்கப்பட்டுப் போவதில்லை!	26
9.	ஏறெடுக்கிறேன்!	29
10.	நீ பயப்படாதே!	32
11.	இருந்தால்...! இருந்தால்...!	35
12.	அற்புதங்கள் எங்கே?	38
13.	வேளை வந்த போது!	41
14.	உயர்ந்த அடைக்கலம்!	43
15.	வாசல்களே...!	46
16.	இருள் நீங்கும்!	49
17.	உயிர் அடையுமா?	52
18.	உயிர்ப்பிக்கமாட்டீரோ?	55
19.	தேசமே, பயப்படாதே!	58
20.	கெம்பீரத்தோடே அறுப்பாய்!	61

வேதனைகள் நீங்கட்டும்!

"நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி சுகமாயிரு என்றார்" (மாற்கு 5:34).

உலகத்தாரின் பல வார்த்தைகள் ஈட்டிகளைப் போல நம்முடைய இருதயத்தைக் குத்தி வேதனையை உண்டாக்குகிறது. நோய்களும், வியாதிகளும் சரீரத்தில் வேதனையை கொண்டு வருகிறது. துரோகங்களும் நயவஞ்சகங்களும் விஷ அம்புகளாய் இருதயத்தை தாக்கி வேதனைப்படுத்துகிறது.

எல்லா இடங்களிலும் வேதனை சூழ்ந்திருக்கும்போது நம் அருமை ஆண்டவர் நம்மைப்பார்த்து, "தேவனுடைய பிள்ளையே, நீ உன் வேதனை நீங்கி சுகமாயிரு" என்று சொல்கிறார்! ஆம் கிறிஸ்துவின் வார்த்தைகள் எவ்வளவாய் நம்மை தேற்றுகிறது!

ஒரு நிமிடம் நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து வேதனை உண்டாக்கும் வழி நம்மிடத்தில் இருக்கிறதா என்று கண்டு பிடிப்போமா? (சங் 139:24).

முதல் முதலாக வேதனை இந்த உலகத்திற்கு எப்படி வந்தது தெரியுமா? அது கீழ்ப்படியாமையினாலேயே வந்தது. கர்த்தர் புசிக்க வேண்டாம் என்று விலக்கின கனியை ஆதி பெற்றோர்கள் புசித்ததினால் வந்தது.

கர்த்தருக்கு செவி கொடுப்பதைப் பார்க்கிலும் சர்ப்பத்திற்கு செவி கொடுக்க அவர்கள் விரும்பினபடியால் வந்தது. கர்த்தரை விட்டு தூரமாய் விலகினதால் வந்தது.

அந்த வேதனை வியாதியாக, மரணமாக, சாபமாக, நெற்றி வேர்வை நிலத்தில் சிந்தி பாடுபடும் விதமாக, வேதனையோடு பிள்ளைபெறும்படியாக பூமியை ஆட்கொண்டது.

எத்தனையோ நூற்றாண்டுகள் கடந்துவிட்ட போதும் இன்றைக்கும் அந்த வேதனையை நாம் அனுபவிக்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம். ஆம் எல்லா வேதனைகளுக்கும் மூல காரணம் கீழ்ப்படியாமையாகிய பாவம் தான்.

பாவத்தினால் வரும் வேதனையை நீக்கத்தான் இயேசு சிலுவையிலே வேதனையை சகித்தார். "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது" (ஏசாயா 53:5).

தேவபிள்ளையே, உன்னுடைய வேதனை எதுவாக இருந்தாலும் அதை நீக்கியருள இயேசு சிலுவையிலே பாடு அனுபவித்திருக்கிறார் என்பதை தியானித்து அந்த கல்வாரி சிலுவையை நோக்கிப் பார்.

அவர் உன் பாவங்களையெல்லாம் நீக்க அதிகாரமுள்ளவராயிருக்கிறார். அவர் ஏற்கனவே உனக்காக சிலுவை சுமந்து பாடு அநுபவித்தபடியால் நீ இன்றைக்கு வீணாக வேதனையை அனுபவித்துக் கொண்டு இருக்க வேண்டிய அவசியமில்லை.

அவர் இன்று அன்போடுகூட உன்னைப் பார்த்து, "நீ உன் வேதனை நீங்கி சுகமாயிரு" என்கிறார்.

அன்று ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே வேதனை வந்தது. அதே நேரத்தில் கிறிஸ்துவின் கீழ்படிதலினாலே அந்த வேதனையிலிருந்து நமக்கு விடுதலை வந்திருக்கிறது. அல்லேலூயா!

"அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.

ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும் படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்'' *(பிலி 2:8-11).*

''ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்'' *(ரோமர் 5:19).*

வேதனையை அறிந்திருக்கிறார்!

"என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனையையும் அறிந்திருக்கிறேன்" (யாத் 3:7).

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னை அறிந்திருக்கிறார். நீ நடந்து போகும் பாதையை அவர் அறிந்திருக்கிறார். மட்டுமல்ல, உன்னுடைய உபத்திரவங்களையும் உன்னுடைய வேதனைகளையும் கூட அவர் அறிந்திருக்கிறார்!

அன்று கொடிய பார்வோன் ராஜாவின் அடிமைத்தனத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் சிக்கி மிருந்த வேதனையடைந்தார்கள்.

எகிப்தில் உள்ள கொடுமையான ஆளோட்டிகள் இஸ்ரவேல் ஜனங்களை மிக கொடுமையாக வேலை வாங்கி ஒடுக்கப்பட்டிருந்தார்கள். செங்கல்களை சுட்டு அவர்கள் கட்டிடங்களைக் கட்ட வேண்டியதிருந்தது.

நம் தேவன் நமது வேதனைகளை அறிகிறவர்; நமது எல்லா நெருக்கங்களிலும் நம்மோடுகூட நெருக்கப்படுகிறவர். இஸ்ரவேல் ஜனங்களின் கூக்குரலைக் கேட்டு நம் தேவனாகிய கர்த்தர் இறங்கி வந்தார். அவர்கள் படுகிற வேதனைகளை அறிந்திருக்கிறேன் என்று சொல்லி மோசேயை எழுப்பி அவன் மூலமாக விடுதலை தர சித்தமானார்.

தேவபிள்ளையே, நீயும் பலவிதமான அடிமைத்தனத்தினால் வேதனையை அனுபவித்துக் கொண்டு வருகிறாயோ? மற்றவர்கள் கடுமையாக பேசி வேதனைப்படுத்துகிறார்களோ? உன் வேலை ஸ்தலத்தில் உன் மேல் அதிகாரிகள் கடுமையாய் வேலை வாங்கி அவதூறாய் பேசி உன்னை

வேதனைப்படுத்துகிறார்களோ? அல்லது நீ இருக்கும் உன் சொந்த வீட்டிலேயே புறக்கணிக்கப்பட்டு அந்நியனைப் போல துன்பப்படுகிறாயோ?

கவலைப்படாதே! கர்த்தர் இன்று அன்போடு உன்னைப் பார்த்து, "உன் வேதனைகள் நீங்கி சுகமாயிரு" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலரின் வேதனைக்கு முக்கிய காரணம் அடிமைத்தனம்தான். எகிப்தியருக்கு அவர்கள் அடிமைப் பட்டிருந்தார்கள்.

எகிப்து என்று சொல்லப்படுவது புதிய ஏற்பாட்டில் உலகத்திற்கும் பாவத்திற்கும் அடிமையாய் இருப்பதைக் காண்பிக்கிறது.

இச்சையானது கர்ப்பம் தரித்து பாவமாகி, பிறகு அந்த பாவம் பழக்கமாகி, பின்பு அந்த பாவ பழக்க வழக்கங்கள் மனுஷனை முழுமையாக அடிமையாக்கி விடுகிறது.

எகிப்தின் ஆளோட்டிகள் விரட்டினதைப் போலவே மனுஷனுடைய மனச்சாட்சி அவனை விரட்டுகிறது.

இயேசு சொன்னார்: "பாவம் செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோ 8:34).

ரோமர் 6:16 சொல்லுகிறது, "மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக் கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமை களாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?

தேவபிள்ளையே, உன் அடிமைத்தனத்திலிருந்து உன்னை மீட்டு எடுக்கவே இயேசு கிறிஸ்து அடிமையின் ரூபமெடுத்தார் (யோவா 2:7).

அத்தியாயம் 3

வேதனை வழியா?

''வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்'' *(சங் 139:24).*

தாவீது எப்பொழுதும் தன்னைத்தானே தேவ சமுகத்தில் நிறுத்தி பரிசுத்த ஆவியானவரின் வெளிச்சத்தில் தற்பரிசோதனைச் செய்கிற பரிசுத்தவானாய் இருந்தார்.

''ஆண்டவரே, வேதனை உண்டாக்கும் வழி என்னில் உண்டோ? அதை எனக்கு வெளிப்படுத்தும், என்னை நான் சரி செய்து கொள்ளட்டும்'' என்கிறார்.

மனுக்குலத்தின் வேதனைகளுக்கு ஒரு காரணம் ஆசைதான். பணக்காராய் மாற வேண்டும். குறுக்கு வழியில் செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். முடிவில் பல வேதனையைக் காண முடிகிறது.

நான் சமீபத்தில் திருச்சிக்கு சென்றபோது ஒரு வாலிபனுடைய கண்ணீர் நிறைந்த சாட்சியை கேட்க வேண்டியதாயிற்று. அவனுடைய தகப்பனார் அவனை வீட்டை விட்டு துரத்தி நீ எப்படியோ நிறைய பணம் சேர்த்துக் கொண்டு வா, அப்பொழுது தான் உன்னை மகனாய் ஏற்றுக் கொள்வேன் என்று சொல்லி விட்டார்.

அவன் பணம் சம்பாதிக்க விரும்பி கள்ளக்கூட்டக் காரர்களோடு சேர்ந்தான். பலவகை கஞ்சாப் பொருட்கள், வெளிநாட்டு பொருட்கள், தங்கக்கட்டிகள் போன்றவற்றை கடத்த ஆரம்பித்தான்.

கடைசியில் அவனுக்குள் எல்லா பாவ பழக்க வழக்கங்களும் குடி கொண்டது. அவன் நிம்மதியற்றவனாய் பல வேதனைகள் கொண்டவனாய் மாறினான். கிறிஸ்து அவனை சந்தித்திராவிட்டால் அவனுடைய நிலைமை பரிதாபமாக முடிந்திருக்கும்.

வேதம் எச்சரிக்கிறது. "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும் மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்" (I தீமோ 6:9, 10).

பண ஆசையினாலே கேயாசி நாகமானின் இரதத்தின் பின்னால் ஓடினான். பெரிய தீர்க்கதரிசியாக வர வேண்டிய அவன், பண ஆசையினால் குஷ்டரோகியாய் தன் வாழ்க்கையை முடிக்க வேண்டியதாயிற்று. எத்தனை வேதனையான முடிவு இது!

யூதாஸ்காரியோத்தின் வாழ்க்கையிலே பண ஆசையாகிய பிசாசு நுழைந்தது. அவனுடைய கண்களை மறைத்தது. முப்பது வெள்ளிக் காசுக்காக கிறிஸ்துவை காட்டிக் கொடுத்து அவன் முடிவில் நான்றுக் கொண்டு செத்தான்.

ஞானி சொல்லுகிறார், "பணப் பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப் பெருக்கன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே" (பிர 5:10).

கடைசி நாட்களைப் பற்றிய ஒரு அடையாளம் என்ன தெரியுமா? பண ஆசை பிடித்தவர்கள் பெருகியிருப்பது தான்!

வேதம் சொல்லுகிறது. "கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில் மனுஷர்கள் பணப்பிரியராயும், வீம்புக்காரராயுமிருப்பார்கள்" (II தீமோ 3:1,2).

தேவபிள்ளையே, பண ஆசையை வேரோடே பிடுங்கி போடுவாயாக. ஆரம்பத்திலேயே முளையிலேயே அதை கிள்ளி எறிந்துவிடு. அதற்கு ஒருபோதும் இடம் கொடுக்

காதே. அப்பொழுது உன்னை சுத்தவானாய் காத்துக் கொள்வாய்.

''பணத்தை வாங்குகிறதற்கும்; வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும் ஆடு மாடுகளையும் வேலைக்காரரை யும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?''

(!! இராஜா 5:26).

சிந்தையை ஆராய்ந்து பாரும்!

''தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும்'' *(சங் 139:23).*

''நான் என்னை ஆராய்ந்தது போதாது. ஆண்டவரே நீரே என்னை ஆராய்ந்து பாரும். என்னுடைய பார்வையில் என்னுடைய தவறுகள் எனக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனல் உம்முடைய பார்வையில் அவைகள் மறைவானவைகள் அல்லவே. நீர் காண்கிறபடி நான் காணும்படி எனக்கு என்னைக் காண்பித்தருளும்'' என்று தாவீது ஜெபிக்கிறதை இந்த வசனத்தில் நாம் பார்க்கிறோம்.

இருதயத்தையும், மனதின் சிந்தனைகளையும் ஆராய்ந்து அறிந்திருந்தால்தான் வேதனைகளை உண்டாக்கும் வழிகளை நீக்க முடியும். கர்த்தரை பிரியப்படுத்த முடியும். நித்திய வாழ்க்கையிலே உற்சாகமாய் செல்ல முடியும். இந்த நாளில் சில சிந்தனைகளை குறித்து நாம் தியானிப்போமாக!

1. **அக்கிரமமான சிந்தை:-** ''என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்கு செவிகொடார்'' *(சங் 66:12).*

அக்கிரம சிந்தை என்பது கிரமத்திற்கு மிஞ்சிய சிந்தை. ஒழுங்குகளுக்கு அப்பாற்பட்ட சிந்தை. இவை யாவும் தேவனுக்கு பிரியம் அல்லாதவை.

''அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள்'' என்று இயேசு சொல்வதைக் கவனியுங்கள் *(மத் 7:23).* தேவபிள்ளையே, அக்கிரம சிந்தனைகளை உன்னை விட்டு அகற்றுவாயாக.

2. **மாம்சமான சிந்தை:-** ''மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்''
(ரோமர் 8:5).

''மாம்ச சிந்தை மரணம்'' (ரோமர் 8:6).

மாம்சத்திற்குரிய சிந்தை என்றால் என்ன? சற்று சிந்தித்துப் பாருங்கள். ஆவியானவருக்கு இடம் கொடாமல் தன் சுய சித்தத்தின்படி மனதையும் மாம்சத்தையும் விரும்புவதைச் செய்வதே மாம்சத்தின் கிரியையாக இருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் பொறாமையும் வாக்குவாதமும் பேதங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? என்று குறிப்பிடுகிறார் (I கொரி 3:3). தேவபிள்ளையே, மாம்ச சிந்தையை உன்னை விட்டு அகற்றுவாயாக!

3. **மேட்டிமையான சிந்தை:-** ''மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்'' (ரோமர் 12:16).

தேவன் அருவருக்கிற பாவம் ஒன்று மனமேட்டிமை. பெருமை உள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். எல்லா பாவங்களைப் பார்க்கிலும் கொடிய பாவம் ஒன்று உண்டு என்றால் அது அகங்காரமும் பெருமையுமாகிய பாவம்தான்.

கர்த்தர் அப்படிப்பட்டவர்களுக்கு எதிர்த்து நிற்கிறவரானபடியினால் தேவபிள்ளையே உன் வாழ்க்கையில் மேட்டியான சிந்தனைகளை அப்புறப்படுத்துவாயாக!

4. **வீணான சிந்தனை:-** ''மற்ற புற ஜாதியினர் தங்கள் வீணான சிந்தைகளில் நடக்கிறபடி நீங்கள் இனிமேல் நடவாமல் இருங்கள்'' (எபே 4:17).

வீணான சிந்தை என்று சொல்லும்போது அது உபயோகமற்ற சிந்தை. அது மனக் கோட்டைகளையும், நிறைவேற்ற முடியாத எண்ணங்களையும் கொண்டு வரும். முடிவில் கேடு உண்டாக்கி கறைப்படுத்தும்.

ஆம் அநேக கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட வீணை சிந்தனைகளுக்கு இடம் கொடுத்து உபயோகமற்றவர்களாக மாறிப் போகிறார்கள். தேவபிள்ளையே, இந்த வீணை சிந்தனைகளையெல்லாம் உன் மனதை விட்டு நீக்கி, தேவ சிந்தையால் உன் மனம் மறுரூபமாகும்படி இடம் கொடுப்பாயாக!

"தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"

(ரோமர் 12:2).

நம்மை நாமே!

''நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந் தீர்க்கப்படோம்'' (I கொரி 11:31).

நம்மை நாமே நிதானித்து அறியும்படி திரும்பத் திரும்ப வேதாகமம் நமக்கு ஆலோசனை சொல்லுகிறது. அநேகர் தங்களைத் தாங்களே ஆராய்ந்து பார்க்காமல் அருகில் உள்ளவர்களையே ஆராய்ந்துப் பார்க்கிறார்கள்.

திருவிருந்து ஆராதனையின் போது தங்களுக்கு முன் இருப்பவர்கள், பின் இருப்பவர்கள், தங்களுக்கு திருவிருந் தைப் பரிமாறும் போதகர், இன்னும் சுற்றுச் சூழ இருப்ப வர்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தங்களை ஆராய்ந்து அறிவதில்லை! இதனால் அவர் களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி தடைபடுகிறது.

தேவ சமுகத்தில் வந்து நம்மை கர்த்தருடைய பாடு மரணத்திற்கு உள்ளாக ஐக்கியப்படுத்திக் கொள்ளும் போது, கிறிஸ்துவின் தியாகத்திற்குரிய வாழ்க்கை வாழு கிறோமா? என்பதைக் குறித்து நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க வேண்டியது மிகவும் அவசியம்.

அன்று இயேசுகிறிஸ்து சீஷர்களைப் பார்த்து உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று சொன்ன போது ஆண்டவரே நானோ, நானோ என்று ஒவ்வொரு சீஷர்களும் கேட்டார்கள். ஆண்டவரே அவனா, இவனா என்று கேட்கவில்லை.

நானோ என்று தங்களைத் தாங்களே நிதானித்து கேட் பது நமக்கு ஒரு நல்ல பாடம் அல்லவா? நாமும் கூட எப் போதும் மற்றவர்களைக் குறித்து நியாயம் தீர்த்துக்கொண் டிராமல் மற்றவர்கள் பாவிகளா? நீதிமான்களா? என்று ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்காமல் நம்மை நாமே நிதானிப்போமாக.

மற்றவர்கள் கண்களிலுள்ள தூசியைப் பார்த்து குறை கூறிக் கொண்டிராமல் நம்முடைய கண்களிலுள்ள உத்தி ரத்தைக் காண்போமாக!

ஏசாயா ஒரு நாள் பரலோக தரிசனம் கண்டார். சேராபீன்கள் கேராபீன்களெல்லாம் தேவனே பரிசுத்தர், பரிசுத்தர் என்று துதித்துக் கொண்டிருப்பதை பார்த்தார்.

அவரை அறியாமல் அவருக்குள் ஒரு பாவ உணர்வு வந்தது. ஐயோ அதமானேன். நான் அசுத்த உதடுகள் உள்ள மனுஷன் என்று கதற ஆரம்பித்தார்.

தேவனுடைய பரிசுத்தத்தைக் கண்டவுடனே அவருக் குள்ளே பாவ உணர்வு வந்து அவரைப் பற்றிப் பிடித்தது. ''ஐயோ'' என்று கதறினர்.

அதற்கு முன்பாக அவர் பிரசங்கித்த வேலைகளிளெல் லாம் பலருடைய குற்றங்களைப் பார்த்து உங்களுக்கு ஐயோ! என்று சொல்லிக் கொண்டிருந்தவர் தேவனுடைய பரிசுத்தத்தைக் கண்டபோதோ தனக்குத்தானே ஐயோ என்று மனங்கசந்து அழுதார்.

தேவபிள்ளையே, சிந்தித்துப் பார். அவர் தன்னைத் தானே ஆராய்ந்து அறிந்ததினல் தன்னைச் சீர்ப்படுத்திக் கொள்ள முடிந்தது.

அப்படியில்லாமல், ''நான் மட்டும் தானு பாவம் செய் தேன்? மற்றவர்கள் பாவம் செய்யவில்லையா? அவர்களு டைய பாவங்களெல்லாம் பாவங்கள் அல்ல, நான் செய் வது தான் பாவமா?'' என்று விதண்டாவாதம் பேசி இருந் திருப்போமென்ருல் ஒரு பெரிய தீர்க்கதரிசியாக வந்திருக்க முடியாது.

கர்த்தர் அவரை பயன்படுத்தியிருக்க முடியாது! தேவ னுடைய பிள்ளையே, உன்னுடைய வாழ்க்கையையெல்லாம் ஆராய்ந்து பார்ப்பாயாக! அனுதின பரிசுத்தத்திற்கு அனு

தின பாவ அறிக்கை அவசியம். உன்னைத் தானே அனு தினமும் நிதானித்து அறிவது அவசியம்.

''தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும். வேதனைஉண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்'' *(சங் 139:23 ,24).*

ஆராய்ந்து பாருங்கள்!

''நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந் தீர்க்கப்படோம்'' (I கொரி 11:31).

கிறிஸ்தவ வாழ்க்கையிலே நாம் முன்னேறிச் செல்வதற்கு அனுதினமும் நம்மை தேவ சமுகத்தில் ஆராய்ந்து பார்த்து நம்முடைய குறைகளையெல்லாம் நிறைவு செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.

குறைகள் நிவிர்த்தி செய்யப்படாவிட்டால் நாளடைவில் மனசாட்சி மழுங்கி போகும். பாவம், பாவமாக தெரிவதில்லை.

ஒரு பக்தன் சொன்னார்: நான் எந்த காரியத்தை செய்வதற்கு முன்னாலும் எந்த இடத்திற்கு செல்வதற்கு முன்னாலும் ஒரு நிமிடம் என்னை நானே ஆராய்ந்து பார்த்து, நான் செய்கிற இந்த கிரியைகளில் கிறிஸ்து சந்தோஷப்படுவாரா? நான் செல்கிற இடத்திற்கு என்னோடுகூட வருவாரா? என்று நான் ஆராய்ந்து பார்ப்பது உண்டு. அதற்கு பின்பே நான் முன்னேறிச் செல்வேன் என்றார்.

பக்தனாகிய செக்ஸ்டஸ் என்பவர் ஒவ்வொரு நாளும் இரவிலே படுக்கைக்கு செல்லும் முன்பு ஜெப நேரத்தில் தன்னுடைய ஆத்துமாவை பார்த்து, ''ஆத்துமாவே இன்று நான் நன்மையான காரியங்களை செய்ய தவறிவிட்டேனோ? கர்த்தருக்கு ஊழியம் செய்ய கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவ விட்டேனோ?'' என்று கேட்பதுண்டாம்.

இன்னொரு பக்தனாகிய பெர்னார்டு என்பவர் காலையில் எழும்பி தன்னைத் தானே பார்த்து, ''பெர்னார்டே, நீ எந்த நோக்கத்திற்காக பூமியில் இருக்கிறாய்? நீ என்னென்ன காரியங்களை இன்று செய்யப் போகிறாய்? என்றுச் சொல்லி அவருக்குத்தானே அன்று நடக்க வேண்டிய வழிமுறைகளை விதித்து கொள்வாராம்.

இன்னொரு பக்தன் ஒவ்வொரு நாளும் தன்னை ஆராய்ந்து பார்க்கும்போது நான் இன்றைக்கு மற்றவர்களுக்கு வெளிச்சமாய் திகழ்ந்தேனா, உப்பாக தியாகம் பண்ணினேனா, கோதுமை மணியாக பலன் கொடுத்தேனா என்று சிந்தித்துப் பார்ப்பதுண்டாம்.

மார்ட்டின் லூத்தர் ஒரு முறை சொன்னார்: ''நான் பெரிய பெரிய ராஜாக்களுக்கு பயந்தது இல்லை. பட்டயத்தை உருவி என்னை கொல்ல வரும் வீரர்களுக்குப் பயந்தது இல்லை. ஆனால், என்னுடைய மனச்சாட்சிக்கு நான் அதிகமாய் பயப்படுவேன்.

என் மனமே என்னை குற்றவாளியாக தீர்க்குமென்றால் நான் சமாதானத்தோடு இருப்பது எப்படி? ஆகவே, அனுதினமும் என்னை தேவ சமுகத்தில் நிறுத்தி ஆராய்ந்து பார்க்கிறேன்'' என்றார்.

தாவீது சொல்வதை கவனியுங்கள். அவர் ஜெபிக்கும்போது ''தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்'' என்று ஜெபிக்கிறார் (சங் 139:23,24).

நம்மை நாமே நிதானித்து பார்போமென்றால் ஒருபோதும் நாம் மற்றவர்களை குற்றம் சாட்ட மாட்டோம். மற்றவர்களை அற்பமாய் எண்ணவும் மாட்டோம்.

மற்றவர்களுடைய குறைகளை காண்பதற்கு முன்பு நம்முடைய குறைகளுக்காக பரிதபித்து தேவசமுகத்தில் முழங்கால் படியிடுவோம்.

எந்த ஒரு மனுஷன் தன்னுடைய குறைகளை அறியாமல் மற்றவர்களை குறை காண்கிறானோ அவனை வேதம் ''மாயக்காரனே'' என்று அழைக்கிறது!

இயேசு சொன்னார்: "மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போட வகை பார்ப்பாய்" (மத் 7:5).

தேவபிள்ளையே, ஒவ்வொரு நாளும் உன்னை நீயே ஆராய்ந்து பார். பரிசுத்தத்திலே முன்செல்ல அது உனக்கு உதவியாய் இருக்கும். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நோக்கி கிறிஸ்து அவனுக்குள் அழைத்த அழைப்பிலே பூமியிலே ஓடுவதற்கு அது ஏதுவாக இருக்கும்.

எரேமியா தீர்க்கதரிசி சொல்வதைப் போல, "நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்" (புல 3:40).

"நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா?"

(IIகொரி 13:5).

அவர் அறிவார்!

"நான் போகும் வழியை அவர் அறிவார்" (யோபு 23:10).

பலர் கடிதம் எழுதும்போது கண்ணீரோடு, நான் நடந்து செல்கிற பாதையை யாருக்கும் தெரிவிக்க விருப்பப் படவில்லை. துயரத்தின் பாதையில், போராட்டத்தின் பாதையில் நான் நடக்கிறேன். கர்த்தர் கூட இதைக் காணுமல் இருக்கிருரே என்று சொல்கிருர்கள்.

தேவபிள்ளையே, நீ நினைக்கிறது போல இல்லை. கர்த்தர் உன்னுடைய வழிகளையெல்லாம் அறிந்திருக்கிருர். நீ செல்கிற கண்ணீரின் பாதையை அவர் அறிவார். நிச்சய மாகவே மிக விரைவில் கர்த்தர் உன் துக்கங்களையெல்லாம் சந்தோஷமாய் மாறப்பண்ணுவார்.

யோபு பக்தன் விசுவாசத்தோடு சொல்கிருர், "நான் போகும் வழியை அவர் அறிவார்."

ஒரு அன்புள்ள தகப்பனைப் போல அவருடைய பிள்ளை யாகிய உன்னை அறிந்து அருமையாய் நடத்திச் செல்கிருர்.

கர்த்தர் உன்னை அறியாதவர் அல்ல. அவர் உன்னு டைய தலையிலுள்ள மயிரையெல்லாம் கூட எண்ணியிருக் கிருர்.

இயேசு சொன்னுர்: "உங்கள் தலையிலுள்ள மயிரெல் லாம் எண்ணப்பட்டிருக்கிறது, ஆகையால் பயப்படாதி ருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்"

(லூக்கா 12:7).

உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே அவர் நம்மேல் அக்கறையுள்ளவராக இருக்கிருர். நமக்கு ஒரு ஆசீர்

வாதத்தின் வாழ்க்கையைத் தரும்படி உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே அவர் அடிக்கப்பட்டார்.

நம்மை முன்னறிந்து முன் குறித்த தேவன் நமக்காக யாவையும் செய்து முடிக்கிறவர் அல்லவா?

அவரே வெள்ளத்துக்கு நீர்க்கால்களையும், இடி முழக்கங்களோடு வரும் மின்னலுக்கு வழிகளையும் தொகுத்தவர் (யோபு 38:27).

நட்சத்திரங்கள் எல்லாம் அதனதன் பாதையிலே செம்மையாய் ஓடும்படி அவைகள் செல்லுவதற்கென்று வழி வகுத்தவரும் அவர் தான் (ஏசாயா 40:26). அவர் உன்னை நடத்த [மாட்டாரா?

விண்வெளி கப்பலை (Rocket) ஆகாயத்திலே செலுத்துகிற விஞ்ஞானிகள் அந்த விண்வெளி செல்லுகிற பாதையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

அவர்கள் பூமியிலே இருந்து கொண்டு அதற்கென்று ஒரு பாதையை ஆகாயத்தில் நியமிக்கிறார்கள். எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் அந்த விண்வெளிக் கப்பல் விஞ்ஞானிகள் நியமித்த பாதையிலே நேர்த்தியாய், செம்மையாய் ஓடுகிறது.

அந்த விண்வெளிக் கப்பலுக்குள் இருக்கும் ஒவ்வொன்றும் என்னென்ன விதத்தில் வேலை செய்கிறது? உள்ளே இருக்கும் சீதோஷ்ண நிலைமை என்ன? இயந்திரங்கள் எவ்விதமாய் வேலை செய்கிறது என்பது எல்லாவற்றையும் அவர்கள் கீழே பூமியிலிருந்து அறிந்து கொள்கிறார்கள்.

விண்வெளிக் கப்பல் செல்லும் பாதை விஞ்ஞானிக்கு அவ்வளவு துல்லியமாய் தெரியும் என்றால், தேவபிள்ளையே, நீ செல்லும் பாதை உன் சிருஷ்டிகருக்கு தெரியாதா?

நம்முடைய தேவன் பரலோகத்திலிருந்தாலும் தம்முடைய சித்தமான எல்லாவற்றையும் அவர் அருமையாய் நேர்த்தியாய் செய்வார். அவர் உன்னை அருமையாய் வழி நடத்த வல்லமையுள்ளவராய் இருக்கிறார் (சங் 115:3).

''அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது''
(எபி 4:13).

ஆகவே தாவீது ஆண்டவரை நோக்கிப் பார்த்து, ''நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என் மேல் நினைவாயிருக்கிறார்; தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர்''(சங் 40:17) என்று பரவசத்தோடு பாடுகிறார்.

தேவபிள்ளையே, உன்னுடைய துயரமான பாதை எதுவாய் இருந்தாலும் உன் கண்ணீரின் பாதை எதுவாய் இருந்தாலும் உன்னைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுப்பாயா?

''ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை'' (ஏசாயா 49:15).

வெட்கப்பட்டுப் போவதில்லை!

"கர்த்தாவே, நான் உம்மை நம்பியிருக்கிறேன், நான் ஒரு போதும் வெட்கமடையாதபடிச் செய்யும்"(சங் 71:7).

மனுஷனால் தாங்கக் கூடாதது ஒன்று உண்டென்றால் அது அவமானமும், நிந்தையும், வெட்கமும்தான்!

மானம் பறிபோய் தலைகுனிந்து நிற்பதைப் போல வேதனையான காரியம் வேறு ஒன்றுமில்லை. பல தோல்விகளினால் வருகிற வெட்கங்கள், பிள்ளைகளுடைய சரியில்லாத வாழ்வினால் வருகிற வெட்கங்கள், எதிர்பாராத நஷ்டங்களினால் வருகிற வெட்கங்கள் மனுஷனுடைய ஆத்துமாவை கசந்துபோகச் செய்கிறது.

சில மாதங்களுக்கு முன்பு ஒரு சகோதரி வெளிதேசத்திலிருந்து கண்ணீரோடு எனக்கு எழுதினார்கள். ஐயா, எனக்கு வயது முப்பதாகிறது. திருமணம் இன்னும் ஆகவில்லை. திடீரென்று சரீரமெல்லாம் கருப்பு போன்ற ஒரு பத்து பரவுகிறது. என் பெற்றோர் எனக்கு திருமணத்திற்கு முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள். நான் வெட்கப்பட்டு போகாதபடி ஜெபியுங்கள் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

கர்த்தர் அந்த அருமை சகோதரியின் சிறுமையை கண்ணோக்கிப் பார்த்தார். அவர்கள் இந்தியா வந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே திருமணம் ஒழுங்கானது. கர்த்தர் அவர்களது சிறுமையை எல்லாம் மாற்றி ஆனந்தக்களிப்புண்டாக்கினார்.

தாவீது கர்த்தரை நோக்கி, கர்த்தாவே நான் உம்மை நம்பியிருக்கிறேன். நான் ஒருபோதும் வெட்கமடையாதபடி செய்யும் என்று ஜெபிக்கிற ஜெபத்திற்கு கர்த்தர் கொடுக்கும் பதில் என்ன தெரியுமா?

''என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்படுவதில்லை!' என்பதேயாகும் (யோவேல் 2:27). வேதத்தைத் திறந்து இந்த வாக்குத்தத்தத்தை வாசித்துப் பாருங்கள்!

தேவபிள்ளையே, இன்று கர்த்தர் உனக்கு திட்டமும் தெளிவுமாய் கூறுகிறார். நீ ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை! நினைக்கிறபடி எந்த தலைக்குனிவும் உனக்கு நேரிடப்போவதில்லை. கர்த்தர் உனக்குக் கொடுக்கிற இந்த அருமையான வாக்குத்தத்தத்தை தியானித்துப் பார்.

''நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை, நான் இஸ்ரவேவேலின் நடுவில் இருக்கிறவரென்றும் நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், வேறொருவர் இல்லையென்றும் அறிந்து கொள்வீர்கள்; என்ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை'' (யோவேல்2:26,27).

நாம் தேவனுடைய ஜனங்கள் மாத்திரமல்ல, தேவனை நோக்கிப் பார்க்கிற ஜனங்களாகவும் இருக்கிறோம். நமக்கு ஒத்தாசைத் தருகிற பர்வதமாகிய கிறிஸ்துவை நோக்கிப் பார்க்கிறோம்.

வேதம் சொல்லுகிறது: ''அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை''(சங்34:5).

தாவீது எப்போதும் கர்த்தரை நோக்கிப் பார்த்தான். கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை என்று விசுவாச அறிக்கை செய்கிறான்.

கோலியாத்திற்கு முன்பானாலும் சரி, சவுல் ராஜாவுக்கு முன்பானாலும் சரி, தாவீது வெட்கப்பட்டு போனதேயில்லை. அல்லேலூயா!

தானியேல் சிங்கக் கெபியில் வெட்கப்பட்டு போனதில்லை. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் அக்கினி ஜுவாலையில் வெட்கப்பட்டு போனதில்லை.

மொர்தெகாய் அகாஸ்வேரு ராஜாவின் அரண்மனையில் வெட்கப்பட்டு போனதில்லை.

நம்பிக்கையோடு கிறிஸ்துவின் வஸ்திர ஓரத்தைத் தொட்ட பெரும்பாடுள்ள ஸ்திரீ வெட்கப்பட்டு போனதில்லை!

வேதம் சொல்லுகிறது: ''உம்மை நோக்கி கூப்பிட்டு தப்பினார்கள்; உம்மை நம்பி வெட்கப்பட்டு போகாதிருந்தார்கள்'' (சங் 22:5).

தேவபிள்ளையே, இன்றைக்கு கர்த்தர் உன்னுடைய கரம் பிடித்து ''நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை'' என்று வாக்களிக்கிறார்.
(ஏசாயா 49:23).

''நான் வெட்கப்பட்டு போகாதபடிக்கு, என் இருதயம் உமது பிரமாணங்களில் உத்தமமாயிருக்கக் கடவது''
(சங் 119:80).

ஏறெடுக்கிறேன்!

''எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்'' *(சங் 12:1).*

''என் கண்களை ஏறெடுக்கிறேன்'' என்று தாவீது ராஜா எத்தனை அருமையாய் கூறுகிறார் பாருங்கள். கண்கள் பரிசுத்தமுள்ள தேவனை நோக்கிப் பார்க்கும்போது அவரிடமிருந்து பரலோக நன்மைகள், கிருபைகள், ஒத்தாசைகள், ஆசீர்வாதங்கள் நம்மை நோக்கி கடந்து வருகிறது.

''வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப் போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கியிருக்குமாப் போலவும், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ் செய்யும் வரைக்கும், எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது'' *(சங் 123:2).*

தேவபிள்ளையே, உன் கண்கள் பூமிக்குரியவைகளை அல்ல, மேலானவைகளை நோக்கிப் பார்க்கட்டும். இயேசு கிறிஸ்துவையே நோக்கிப் பார்க்கட்டும். உன்னுடைய விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற அவரை நோக்கிப் பார்த்து நீ ஓடக் கடவாய்

(எபி 12:1).

கர்த்தரை உன் கண்கள் நோக்கிப் பார்க்க வேண்டுமென்றால் உன் கண்களில் பரிசுத்தம் அவசியம். உன் கண்கள் கர்த்தருடைய இரத்தத்தால் கழுவப்பட்டிருக்க வேண்டும். பாவமுள்ள, அசுத்தமுள்ள மனுஷனால் பரிசுத்தமுள்ள தேவனை நோக்கிப் பார்க்க முடியாது அல்லவா?

வேதத்தில் ஆயக்காரனான ஒருவனுடைய உள்ளத்தில் குற்ற மனச்சாட்சி வாதித்தபடியினால் அவன் தன் கண்களைக் கூட வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல்

மார்பிலே அடித்துக் கொண்டு பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று சொன்னான் (லூக் 18:13).

அதே நேரத்தில் பாவங்கள் மன்னிக்கப்படும்போது, கர்த்தருடைய இரத்தத்தினால் நம்முடைய கண்களும் ஆத்துமாவும் கழுவப்படும்போது நாம் மகிழ்ச்சியோடு தேவனுடைய பொன் முகத்தைப் பார்க்கிறோம்.

நமக்கு ஒத்தாசை அவசியம். பிதாவாகிய கர்த்தரை அப்பா, பிதாவே என்று புத்திர சுவிகாரத்தோடு ஆவலோடு அழைக்க நமக்கு பரிசுத்தம் அவசியம்!

பழைய ஏற்பாட்டில் வனாந்தரத்தில் கொள்ளிவாய் சர்ப்பங்கள் இஸ்ரவேலரை கடித்தபோது, இஸ்ரவேலரின் கண்கள் நோக்கிப் பார்க்கும்படி வெண்கல சர்ப்பமானது உயர்த்தப்பட்டது.

யார் யார் விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தார்களோ, அவர்கள் சர்ப்பம் தீண்டின வேதனையிலிருந்தும் மரணத்திலிருந்தும் பாதுகாக்கப்பட்டார்கள்.

தேவபிள்ளையே, இன்று உனக்காக கல்வாரி சிலுவையிலே மரித்த இயேசுவை நோக்கி உன்னுடைய கண்கள் ஏறெடுக்கப்படும் என்றால் உன்னுடைய பாவங்கள் நீங்கி பாதாளத்தின் பிடியிலிருந்து விடுதலையாக்கப்பட்டு நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வாய்.

வேதம் சொல்கிறது: "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல மனுஷ குமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்பட வேண்டும்" (யோவா 3:14,15).

"பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்" (ஏசாயா 45:22).

தேவபிள்ளையே, இன்று இரட்சிப்பு உனக்கு எவ்வளவு சமீபத்தில் அருகாமையில் இருக்கிறது என்பதை சிந்தித்துப் பார். நீ செய்ய வேண்டியதெல்லாம் விசுவாசத்தோடு உன் கண்களை ஏறெடுப்பதுதான்.

''இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவி கொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் என்றார்'' (யோவா 11:31).

நீ பயப்படாதே!

''நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்''

(ஏசாயா 41:10).

கர்த்தர் நம்மைப் பார்த்து, ''பயப்படாதே'' என்று சொல்லும்போது நாம் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை.

அதை மீறி நாம் பயப்படுகிறோம் என்றால் கர்த்தரை நாம் விசுவாசிக்கவில்லை என்று தான் அர்த்தம்.

பயம் ஒரு ஒனுயைப் போன்றது. அது மனுஷனுடைய உள்ள உறுதியையும், மனத் தின்மையையும் கெடுத்து, குலைத்து விடும். அவனுடைய ஆரோக்கியத்தையும் சரீரத்தையும் நஷ்டப்படுத்தி விடும்.

பயமுள்ளவனால் சத்துருவை எதிர்த்து நிற்கமுடியாது. பயமுள்ளவனால் கர்த்தரைச் சார்ந்து ஜீவிக்கவும் இயலாது. பயமுள்ளவன் தோல்வியை நோக்கியே நடைபோடுகிறான்.

கர்த்தர், ''நீ பயப்படாதே'' என்று சொன்னது மாத்திரமல்ல, கூடவே ஒரு உடன்படிக்கையையும் செய்து, ''நான் உன்னுடனே கூட இருக்கிறேன்'' என்கிறார்.

ஆம், அவர் எப்பொழுதும் நம்முடனே கூட இருக்கிறார். அல்லேலூயா! நம்மை இரட்சிக்கும்படி நம்மோடு கூட இருக்கிறார் (எரேமியா 1:19).

நம்மைக் காக்கும்படிக்கு நம்மோடு கூட இருக்கிறார் (எரே 1:8).

கடைசி மட்டும் வழி நடத்த நம்முடனே கூட இருக்கிறார் (எபி 7:25).

அன்றைக்கு எரேமியாவின் பயத்தை நீக்கி பெலப்படுத்துவதற்கு கர்த்தர் ஒரு அருமையான உடன்படிக்கையை அவனோடு கூட செய்தார்.

''உன்னை இந்த ஜனத்திற்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத் தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கிறேன்'' (எரே 15:20) என்றார்.

ஆம், தேவபிள்ளையே, கர்த்தர் இன்றைக்கு விசேஷித்த விதமாய் உன்னைப் பார்த்து மீண்டும் சொல்கிறார்: ''உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத் தப்புவிப்பதற்காகவும் நான் உன்னுடனே இருக்கிறேன், பயப்படாதே'' அல்லேலூயா!

மனுஷரைக் கண்டு பயப்படாதே. சத்துருக்களை கண்டு பயப்படாதே. உனக்கு விரோதமாய் எழும்புகிற நாவுகளைக் குறித்து பயப்படாதே. உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்.

நீ உன் அலுவலகத்திற்குப் போகையில் பயப்படாதே. கவலைப்படாதே. தூர இடங்களுக்கு செல்கிறதைக் குறித்து பயப்படாதே. முன்பின் அறியாத மக்கள் மத்தியில் வாழ்வதைக் குறித்து பயப்படாதே.

வேதம் சொல்கிறது: ''நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்''

(யோசுவா 1:9).

நீ கால் மிதிக்கும் இடமெல்லாம் அவர் உன்னோடு கூட வந்து அதை உனக்கு சுதந்தரமாய்த் தருவதற்கு உன்னோடு கூட இருக்கிறார்.

கானுனுக்கு செல்லும் வழியெல்லாம் கர்த்தர் கூடவே இருந்து அவர்கள் சென்ற இடமெல்லாம் மேக ஸ்தம்பத்தையும் அக்கினி ஸ்தம்பத்தையும் அனுப்பி கானுனே சுதந்தரமாய்க் கொடுத்தவர், நிச்சயமாகவே நீ போகிற இடமெல்லாம் உன்னேடு கூட வருவார்.

அவர் ஒருநாள் இரண்டுநாள் மாத்திரமல்ல, என்றென்றைக்கும் சதா காலங்களிலும் அவர் உங்களுடனே கூட இருக்கிருர்.

அவர் எப்பொழுதும் உங்களுடனே இருக்கிறபடியிஞல் உங்களே முற்றும் முடிய இரட்சிக்க வல்லமையுள்ளவராய் இருக்கிருர். தேவபிள்ளேயே, அந்த வல்லமையுள்ள கிறிஸ்துவில் எப்பொழுதும் சார்ந்து கொள்வாயாக!

''உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்ருர்''
(மத் 28:20).

அத்தியாயம் 11

இருந்தால்...! இருந்தால்...!

''கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்?'' *(நியாயாதி 6:13).*

இருந்தால்...இருந்தால்...என்ற வார்த்தைகள் வேதாகமத்தில் ஏராளம் காணப்படுகிறது. சில வார்த்தைகள் சந்தேகமாய் தொனிக்கிறது.

சில வார்த்தைகள் நமக்கு எச்சரிப்பாய் விளங்குகிறது. சில வார்த்தைகள் நம்மை உற்சாகப்படுத்துகிறதாய் இருக்கிறது.

1. தேவன் நம்முடைய பட்சத்தில் இருந்தால்...! *(ரோமர் 8:31).*

2. கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால்...! *(எண் 14:8).*

3. கர்த்தர் எங்களோடே இருந்தால்...! *(நியாயாதி 6:13).*

தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் என்று எழுதிவிட்டு அப்போஸ்தலனாகிய பவுல் சிந்திக்க ஆரம்பிக்கிறார். ஆ, அந்த பாக்கியம் எவ்வளவு ஒரு அருமையான பாக்கியம்! தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதியாய் இருப்பவன் யார்?

தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் என்று சிந்தித்த தாவீது ராஜா சொல்கிறார்: ''எனக்கு விரோதமாகச் சுற்றிலும் படையெடுத்து வருகிற பதினாயிரம் பேருக்கும் நான் பயப்படேன்'' *(சங் 3:6).*

''தேவன் நம் பட்சத்திலிருந்தால்'' என்று சொல்லி ஆபகூக் சிந்திக்கிறார்: ''அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சச் செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப் போனாலும், வயல்கள்

தானியத்தை விளைவியாயாமற் போனாலும், கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்'' (ஆபகூக் 3:17, 18).

''கர்த்தர் எங்களோடே இருந்தால்'' என்று கிதியோன் சிந்தித்தார்: கர்த்தர் எங்களோடே இருந்தால் பழைய துயரங்கள், துன்பங்கள் எங்களுக்கு நேரிடவே நேரிடாதே என்கிறார் (நியா 6:12).

தேவபிள்ளையே, கர்த்தர் எப்போதும் நம்மோடு கூடவே இருக்கிறார். நாம் எங்கே போனாலும் அவர் நம்மோடு கூட வருகிறார். அதை ஒருபோதும் மறந்து போகாதே!

நான் உன்னோடு கூட இருப்பேன் என்று கர்த்தர் கொடுத்த எல்லா வாக்குத்தத்தங்களையும் விசுவாசித்து கர்த்தரைத் துதிப்பாயாக!

''நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப் பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்'' (ஆதி 28:15).

''அதற்கு அவர்: என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்'' (யாத் 33:14).

''நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்''
(லேவி 26:12).

''நீ உன் சத்துருக்களுக்கு எதிராக யுத்தஞ் செய்யப் புறப்பட்டுப் போகையில், குதிரைகளையும், இரதங்களையும், உன்னிலும் பெரிய கூட்டமாகிய ஜனங்களையும் கண்டால், அவர்களுக்குப் பயப்படாயாக; உன்னை எகிப்து தேசத்தி

லிருந்து புறப்படப் பண்ணின உன் தேவனுகிய கர்த்தர் உன்னேடே இருக்கிருர்'' (உபா 20:1).

''நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னேடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன் மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகா திருப்பாய்; அக்கினி ஜுவாலை உன் பேரில் பற்ருது''

(ஏசாயா 43:2).

''ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினுலே எங்கே கூடியிருக்கிருர்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்ருர்'' (மத் 18:20).

''நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்ருர், ஆமென்'' (மத் 28:20).

அற்புதங்கள் எங்கே

''எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே?'' *(நியா 6:13)*

நம்முடைய தேவன் அற்புதங்களைச் செய்கிறவர். இன்றைக்கும் அற்புதங்களைச் செய்ய அவர் ஜீவனோடிருக்கிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவன் அல்லவா?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எருசலேமில், யூதேயாவில், கப்பநகூமில் எனென்ன அற்புதங்களைச் செய்தாரோ அவைகளை இன்றைக்கும், இப்பொழுதே, உன்னுடைய வாழ்க்கையில் செய்ய வல்லமையுள்ளவராயிருக்கிறார்!

தோமா அப்போஸ்தலர் கி.பி.52-ம் ஆண்டு இந்தியாவிற்கு வந்தார். சென்னையையும், கேரளாவின் கடற்கரைப் பகுதியையும் தன்னுடைய ஊழிய ஸ்தலமாக தெரிந்து கொண்டார்.

ஒருமுறை கேரள கடற்கரையின் வழியாக நடந்து வந்தபோது அங்கு ஒரு பெரிய இந்துமத உச்சவம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. அங்கே பக்த கோடிகள் கடலில் நிற்பதையும் கைகளில் தண்ணீரை அள்ளி சூரியனின் மேல் தெளித்து சூரியனை கடவுகளாக வணங்குவதையும் கண்டார்.

பக்தி வைராக்கியம் கொண்ட தோமா அப்போஸ்தலன் சொன்னார், ''சூரியனையும் சந்திரனையும் உண்டாக்கின ஆண்டவர் ஒருவர் இருக்கிறார். அவர் தான் இயேசு கிறிஸ்து! அவர் அற்புதங்களைச் செய்கிறவர்! அவர் இன்றைக்கும் ஜீவனோடிருக்கிறார் என்பதை நிரூபிக்கிறேன்'' என்று சவால் விட்டார்.

அந்த சவாலின்படி இந்துக்களும், தோமாவும் கடல் தண்ணீரை கடலிலிருந்து அள்ளி வானத்திற்கு நேராக எறிய வேண்டும். தண்ணீர் அள்ளப்பட்ட அந்த இடத்தில் தண்ணீருக்கு மத்தியில் பள்ளம் விழ வேண்டும். மட்டுமல்ல, வானத்தில் எறியப்பட்ட தண்ணீர் வானத்திலேயே நிற்க வேண்டுமென்பதேயாகும்.

முதலில் இந்து பக்தர்கள் அவ்விதமாக தண்ணீரை எறிந்து பார்த்தார்கள். தண்ணீரை எடுத்த உடனேயே சூழ இருந்த தண்ணீர் வந்து அந்த இடத்தை நிரப்பினது. ஆகாயத்தில் வீசப்பட்ட தண்ணீரும் புவியீர்ப்பின் காரணமாக கீழே விழுந்தது.

அதன் பின்பு தோமா தன்னுடைய குரலை உயர்த்தி "ஜீவனுள்ள இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நான் கட்டளையிடுகிறேன். தண்ணீரே ஆகாயத்தில் அப்படியே நில்'' என்று கட்டளையிட்டார்.

என்ன ஆச்சரியம்! தண்ணீர் ஆகாயத்தில் அப்படியே நின்றது. அவர் தண்ணீர் எடுத்த பகுதியில் குழி அப்படியே பள்ளமாக நின்று கொண்டிருந்தது.

இந்த அற்புதத்தைக் கண்டவுடன் அங்கிருந்த அநேக பூசாரிகள், இந்து முக்கிய பிரமுகர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள்.

தோமா அப்போஸ்தலன், அவர்களை இயேசுவண்டை அருமையாய் வழி நடத்தினார். இன்றைக்கும் கேரளாவிலிருக்கிற மார்த்தோமையர்கள் தோமாவின் காலத்திலிருந்தே கிறிஸ்தவர்களாயிருந்து வருகிறார்கள்.

எலியாவின் தேவன் இன்றைக்கும் ஜீவனோடிருக்கிறார். நம்முடைய பிள்ளைகளின் ஜெபத்தைக் கேட்டு அற்புதங்களைச் செய்ய அவர் ஆவலோடுகூட இருக்கிறார்.

தேவனுடைய பிள்ளையே, அந்த கர்த்தர் உன்னுடைய தேவனாய் இருக்கிறார். அவர் பட்சபாதம் உள்ளவர் அல்ல.

வேளை வந்த போது...!

"வேளை வந்தபோது, அவரும் அவருடனே கூட பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள்" (லூக் 22:14).

நம் அருமை ஆண்டவர் குறித்த காலத்தின் மேலும் குறிப்பிட்ட வேளையின் மேலும் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்த அவர் பிதாவின் வேளைக்கும் காத்திருந்தார். அவருடைய கண்களானது பிதாவின் வேளைக்காக எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தது என்பதை நாம் மறந்துபோய் விடக்கூடாது.

தம் சீஷர்களோடு கூட பந்தியிருப்பதற்கும் ஏற்ற வேளையை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அந்த வேளை வந்தபோது சீஷர்களோடுகூட பந்தியிருந்தார்.

தேவபிள்ளையே, வேளையையும் காலத்தையும் அறிய உன்னை ஒப்புக்கொடுப்பாயாக. அவர் ஏற்ற வேளையில் உன்னை உயர்த்துவார். ஏற்ற வேளையில் உனக்கு சகாயம் செய்வார். அவர் ஒவ்வொன்றையும் அதனதன் காலத்திலே நேர்த்தியாக செய்து முடிப்பார்.

சங்கீதக்காரன் சொல்லுகிறார்: "ஏற்ற வேளையில் ஆகாரம் தருவார்" (சங் 104:27). "கர்த்தர் ஏற்ற வேளையில் நீதி செய்வார்" (சங் 119:126). "ஏற்ற வேளையில் என்ன பேச வேண்டுமென்பதை உனக்குப் போதிப்பார்" (லூக்கா 12:11,12).

கர்த்தர் ஏற்ற வேளையிலே உனக்குச் சகாயம் செய்யும்படி நீ தேவனுடைய பாதத்திற்கருகே காத்திருப்பாயா? சகாயம் செய்யும் வேளைக்காக எதிர்பார்த்து இருப்பாயா?

ஒருமுறை தேவ ஊழியரான பில்லிகிரகாம் எலிசபெத்ராணியுடன் விருந்து உண்பதற்காக அழைக்கப்பட்டிருந்

தார். அந்த விருந்தில் அவர் பங்கு பெறுவதற்காக குறிப்பிட்ட நேரத்திற்கும் சுமார் 45 நிமிடங்களுக்கு முன்பாகவே அவர் அந்த இடத்திற்குச் சென்று காத்திருக்க வேண்டியதாயிற்று!

ராஜாதி ராஜாவாகிய நம் தேவனை சந்திப்பதற்கு நாம் ஏற்ற வேளையில் செல்லுகிறோமா? நாம் அவருடன் பேசுவதற்கு என்று ஜெப வேளைகளை குறிப்பிட்டு ஒதுக்கி வைத்திருக்கிறோமா?

அலுவலகத்திற்கு ஏற்றவேளையில் செல்லும் பலர், ஆலயத்திற்கு வருவது என்றால் அதிக அலட்சியத்துடன் பிந்தி வருவது இல்லையா? பிந்தி வந்துவிட்டு முந்தி வெளியேறுவதில் கவனமாயிருப்பதில்லையா?

தானியேலுக்கு விரோதமாக பாபிலோனுடைய தேசாதிபதிகளும் பிரபுக்களும் பிரதானிகளும் ஆலோசனைப் பண்ணிக் கொண்டிருந்த வேளையிலும் தானியேல் தேவனை நோக்கி மூன்று வேளையும் ஜெபித்தாராம். தேவனை சந்திக்கும் வேளையை எந்த சூழ்நிலையிலும் தானியேல் தவற விட்டு விடவில்லை. எஸ்தர் அப்படியே தேவனோடு கூட மன்றாடுகிற வேளைக்கும் இராஜாவை சந்திக்கும் வேளைக்கும் காத்திருந்தாள். மூன்று நாட்கள் இரவும் பகலும் உபவாசித்து ஜெபித்தாள்.

முடிவாக அவளது வேளை வந்தபோது, அதை முழுவதுமாக பயன்படுத்திக் கொண்டாள். அதன் விளைவாக வேதத்தில் அவளுக்கு நீங்காத ஒரு இடம் கிடைத்தது!

"ஆகாயத்திலுள்ள நாரை முதலாய்த் தன் வேளையை அறியும்; காட்டுப்புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும்; என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள் என்று கர்த்தர் உரைக்கிறாரென்று சொல்" (எசாயா 8:7).

உயர்ந்த அடைக்கலம்!

"தேவன் நான் நம்பியிருக்கிற துருகமும், என் கேடகமும், என் ரட்சண்ணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமும், என் புகலிடமும், என் ரட்சகருமானவர்" (II சாமு 22:3).

கர்த்தர் என் உயர்ந்த அடைக்கலமானவர். இதுவே தாவீதின் அனுபவமும் சாட்சியுமாய் இருந்தது (சங் 59:9).

ஆகவே, அவர் இஸ்ரவேல் புத்திரரை உற்சாகப்படுத்தி தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர் என்று கூறுகிறுர் (சங் 46:1).

அடைக்கலம் என்ருல் என்ன? அடைக்கலம் என்ற பதத்துக்கு பாதுகாப்பு, தப்பிக்கொள்ளும் இடம், தஞ்சமான ஸ்தலம் என்றெல்லாம் அர்த்தம் தருகிறது.

வெளியிலே இருக்கும் பயங்கரமான எதிரிகளுக்கு தப்புவதற்காக சிறு சிறு சிட்டுக் குருவிகள் நம்மூடைய வீடுகளில் வந்து ஒதுங்குகின்றன. அந்த குருவிகளுக்கு 'அடைக்கலான் குருவிகள்' என்று பெயர்.

தமிழ்நாட்டில் பழங்கால கதை ஒன்று உண்டு. இந்தியாவைச் சிபி சக்கரவர்த்தி என்ற அரசன் அரசாண்டு வந்தபோது, ஒரு புருவை பருந்து ஒன்று துரத்தி வருகிறதைக் கண்டார். அந்தப் பருந்துக்கு தப்பிய புரு, சிபி சக்கரவர்த்தியின் மடியிலே அடைக்கலம் புகுந்தது. அதற்கு அவர் முழு பாதுகாப்பைக் கொடுக்க தீர்மானித்தார்.

ஆனுல் அதை துரத்தி வந்த பருந்துவோ, அவரோடு போட்டி வாதிட ஆரம்பித்தது. அது அவரைப் பார்த்து,

''நீர் எனக்கு நியாயம் செய்யும். அந்தப் புரு என்னுடை உணவு. அதை நான் நீண்டநேரமாக துரத்தி வந்தி கிறேன். அதற்கு நீர் அடைக்கலம் கொடுப்பது நியா அல்ல. எனக்கே அதைத் தர வேண்டும்'' என் கேட்டது.

அதற்கு அந்த சிபி சக்கரவர்த்தி, அந்தப் பருந்தை பார்த்து, நான் அதற்கு அடைக்கலம் கொடுத்துவிட்டே ஆகவே அது எவ்வளவு எடை உள்ளதோ அந்த அ மாம்சத்தை என் சரீரத்திலிருந்து வெட்டி நான் உனக் தருகிறேன் என்று சொல்லி, புருவை ஒரு தராசி வைத்தார்.

தன்னுடைய கைகளிலும் கால்களிலுமிருந் மாம்சத்தை வெட்டி மறு தராசில் வைத்தார். ஆ அந்த மாம்சம் எல்லாம் புருவின் எடைக்குச் சரியா இல்லை. கடைசியிலே சிபி சக்கரவர்த்தியே போ தராசில் ஏறி அமர்ந்தார். அப்பொழுது அந்த தராசு ச நிலையானது.

புருவுக்கு அடைக்கலம் கொடுப்பதற்காக தன்னை தத்தம் செய்தார் அந்த சிபி சக்கரவர்த்தி!

இப்படி ஒரு கதை நம் தேசத்தில் வழங்கப்படுவ ஆச்சரியமாய் இருக்கிறது அல்லவா? அது கிறிஸ் இயேசுவை நமக்கு ஞாபகப்படுத்துகிறது அல்லவா?

தேவனிடம் அடைக்கலமாய் ஓடி வந்த நமக்கா அவர் சிலுவையிலே தம்மை பலியாக தந்திருக்கிறு தன்னையே முற்றிலும் அர்ப்பணித்திருக்கிறுரே! அ ருடைய கல்வாரியின் இரத்தத்திலும், அவருடைய காய களிலும் நமக்கு அடைக்கலம் உண்டு! ஆகவே, கன்ம யின் வெடிப்பிலே நாம் புருவைப் போல தங்குகிறோம்!

பழைய ஏற்பாட்டில் அடைக்கலப் பட்டணங்க என்று ஆறு பட்டணங்கள் குறிக்கப்பட்டன. கொ

செய்தவன் அங்கே தப்பி ஓடிப் போய் அடைக்கலம் புகுவதற்காக இந்தப் பட்டணங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இந்த அடைக்கலப் பட்டணத்தில் ஒருவன் ஒளிந்து கொண்டால், அவனை யாரும் பிடித்து கொலை செய்ய முடியாது. அதே நேரம் அதை விட்டு வெளியே வந்தால் அவனுடைய எதிரிகள் அவனைக் கொன்று போடுவார்கள். அந்த எதிரிகளின்மேல் அவனுடைய இரத்தப்பழி தொடராது (எஸ்ரு 35:6-28).

புதிய ஏற்பாட்டிலே நமக்கு ஒரே ஒரு அடைக்கலப் பட்டணம்தான். அந்த பட்டணம் இயேசு கிறிஸ்துவே. அவரிடத்திலே நம்முடைய ஆத்துமாவுக்கு அடைக்கலம் உண்டு. நம்முடைய ஆவிக்கு அடைக்கலம் உண்டு. நம் உள்ளத்திற்கு ஆறுதல் உண்டு.

இயேசு அந்த அடைக்கலத்தை தர அன்போடு கூட நம்மை அழைக்கிறுர். வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் என்று அவர் கூப்பிடுகிறுர் (மத் 11:28).

''சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறுர்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்'' (சங் 46:7).

வாசல்களே...!

''வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள். அநாதி கதவுகளே, உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்'' (சங் 24:7).

பாவ வழிகளுக்கு ஆயிரம் வாசல்கள் உண்டு! பரிசுத்த வழிக்கு வாசல் கிறிஸ்து ஒருவரே!

நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று கர்த்தர் சொல்லுகிறார் (யோவான் 14:6).

கிறிஸ்தவ மார்க்கம் ஒரு கட்டுப்பாடான மார்க்கம் தான். இதிலே உட்பிரவேசிப்பது ஒருவேளை சற்று கடினமானதாய் இருக்கக்கூடும்.

''உலகத்தின் வழிகளில் செல்லாதே, பாவ இச்சைகளை விரும்பாதே'' என்றெல்லாம் நாம் போதிக்கப்படுகிறோம். உண்மையாகவே, கிறிஸ்தவ மார்க்கம் ஒரு இடுக்கமான மார்க்கம்தான்.

ஆனால் வேதம் சொல்கிறது: ''இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்'' (மத் 7:13, 14).

தேவபிள்ளையே, அந்த வாசல் இடுக்கமான வாசலாய் இருந்தாலும், அந்த வாசலின் வழியாக உட்பிரவேசிக்கும் போது நீ இரட்சிப்பை பெற்றுக் கொள்கிறாய். தேவனுடைய வாசல்கள் உன்னைத் துதியின் பாதையிலும், மகிழ்ச்சியின் பாதையிலும் நடத்துகிறது.

சங்கீதக்காரன் அந்த வாசலின் வழியாக மகிழ்ச்சியோடு பிரவேசிக்கும்போது, "அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்" *(சங் 100:4)* என்று சொல்லி பரவசமடைகிறார்.

கர்த்தருடைய வாசல் இடுக்கமான வாசல், அது துதியின் வாசல், அது இரட்சிப்பின் வாசல், மட்டுமல்லாமல், அது நீதியின் வாசலாகும். தேவனுடைய நீதியை சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்கள் அந்த நீதியின் வாசல் வழியாகவே உட்பிரவேசிப்பார்கள்.

தாவீது சொல்கிறார்: "நீதியின் வாசல்களைத் திறவுங்கள்; நான் அவைகளுக்குள் பிரவேசித்துக் கர்த்தரைத் துதிப்பேன். கர்த்தரின் வாசல் இதுவே; நீதிமான்கள் இதற்குள் பிரவேசிப்பார்கள்" *(சங் 118:19, 20)*.

தேவபிள்ளையே, கர்த்தருடைய வழிகளில் உத்தமமாய் நடப்பாயாக. உலகத்தில் நீ கர்த்தரைப் பின்பற்றுவதினிமித்தம் ஒரு வேளை பாடுகளையும், கஷ்டங்களையும் நீ அனுபவிக்க வேண்டியது வரலாம். அநேக உபத்திரவங்களின் வழியாக கடந்து செல்ல வேண்டியது வரலாம். என்றாலும் மனம் சோர்ந்து போகாதே.

இன்று கிறிஸ்துவாகிய இடுக்கமான வாசல் வழியாக பிரவேசித்தால் ஒரு நாள் பரலோகத்தின் வாசல்கள் உனக்காக திறக்கப்படும். எக்காள சத்தம் தொனிக்கும் போது வானத்தின் வாசல்கள் உன்னை வரவழைக்கும். நீ இமைப்பொழுதில் மறுரூபமாகி, அந்த வாசலின் வழியாக ஆட்டுக்குட்டியானவரின் மகிழ்ச்சியில் பங்கடைவாய்.

அன்றைக்கு யாக்கோபு தரிசனத்திலே வானம் திறக்கப்பட்டிருக்கிறதைப் பார்த்தான். ஒரு ஏணி பூமியிலிருந்து வானத்திற்கு வைக்கப்பட்டிருந்தது.

அதிலே தேவதூதர்கள் இறங்குகிறவர்களும், ஏறுகி
வர்களுமாக இருந்தார்கள். அதைப் பார்த்ததும் இ
தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது வானத்தி
வாசல் என்றான் (ஆதி 28:12, 17).

தேவபிள்ளையே, கர்த்தர் உனக்காக வானத்தி
வாசல்களைத் திறந்திருக்கிறார். வானத்தின் பலகணிக
யும் உனக்குத் திறப்பார். பரிசுத்தவான்களோடு நா
உட்பிரவேசித்து தேவனுடைய சந்தோஷத்தில் நித்தி
நித்தியமாய் மகிழ்ந்திருக்கும் நாட்கள் சமீபமாயிருக்கிறது.

''சீயோனே, உன் தேவனைத் துதி. அவர் உன் வாச
களின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தி, உன்னிடத்திலுள்ள
உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்'' (சங் 147:13).

இருள் நீங்கும்!

''இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன் மேல் காணப்படும்'' (ஏசா 60:2).

நம் தேவன் இருளில் பிரகாசிக்கிறவர்! இருளிலிருந்து வெளிச்சத்தைப் புறப்பட பண்ணினவர்! உலகத்திலுள்ள சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் உருவாக்கினவர். அவரே நம்முடைய மகிமையின் ராஜா.

வேதம் சொல்கிறது: ''தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார். வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார்'' (ஆதி 1:3,4).

உலகத்தைப் பாருங்கள். அது இருளில் மூடிக் கிடக்கிறது! பாவம் மனுஷனுடைய ஆத்துமாவில் இருளைக் கொண்டு வருகிறது. அந்த இருளில் திகழ்கின்ற அவன், முடிவில் பாவமாகிய காரிருளில் இறங்கி சென்று விடுகிறான். அது எத்தனை பரிதாபமானது!

வியாதிக்கூட ஒரு இருள்தான். நோய் வாய்ப்பட்டு படுத்த படுக்கையில் இருக்கும்போது வாழ்க்கையின் எதிர் காலமே இருளாய் தோன்றுகிறது.

பிரச்சனை என்னும் இருள்; பிரிவினையின் இருள்; பாடுகளின் இருள்; அறியாமையின் இருள் என்ற பலவகை இருள்கள் ஆத்துமாவை சூழ்ந்து கொள்கிறது. ஜனங்கள் இருளிலே புழுக்களைப் போல நெளிந்து நிம்மதியில்லாமல் தவித்து தடுமாறுகிறார்கள்.

இயேசுவை நோக்கிப் பாருங்கள். அவரே இருளை வெளிச்சமாக செய்தவர். அவரைக் குறித்து வேதம், உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற

ஒளியே அந்த மெய்யான ஒளி'' என்று சாட்சி கொடுக்கிறது (யோவான் 1:9).

தேவபிள்ளையே, உன் உள்ளத்தில் அவருடைய ஒளி வீசுகிறதா? நீ பாவ இருளிலே அமிழ்ந்து போய் இருக்கிறாயா?

''என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாய் வந்தேன்'' (யோவான் 12:46) என்று இயேசு சொன்னார்.

நம்மை இருளிலிருந்து தூக்கி எடுத்த ஆண்டவரை சுவிசேஷமாய் அறிவிக்க தயங்க வேண்டாம். கர்த்தருடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்த வெட்கப்பட வேண்டாம்.

அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதுகிறார், ''நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துக் கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்'' என்று எழுதுகிறார் (I பேதுரு 2:9).

தேவபிள்ளையே, கிறிஸ்துவையல்லாமல் வேறு யாராலும் ஒரு மனுஷனுடைய ஆத்துமாவில் ஒளியை ஏற்றி வைக்க முடியாது. அவர் ஒருவரே உலகத்துக்கு ஒளியானவர். தம்முடைய சுவிசேஷ தீபத்தினால் உள்ளத்தில் விளக்கை ஏற்றுகிறவர்.

தாவீது தேவனை நோக்கி: ''தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர், என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்'' என்று விசுவாசத்தோடு சொல்லுகிறதை பார்க்கிறோம் (சங் 18:28).

தேவபிள்ளையே, ஒருவேளை பின் மாற்றத்தினால் உன் வெளிச்சம் மங்கி போனதோ? உன் பிரகாசம் குறைந்த

போனதோ? கர்த்தர் தம்முடைய வெளிச்சத்தினால் உன்னை மீண்டும் பிரகாசிக்க செய்ய கிருபை உடையவராகவே இருக்கிறார்.

"ஆண்டவரே, என் உள்ளத்தில் பரிசுத்த எண்ணெயை ஊற்றும், ஜெப ஆவியை ஊற்றும், நான் உம்மில் வர விரும்புகிறேன்" என்று கதறுவாயானால் அவர் நிச்சயமாகவே மங்கி எரிகிற திரியை அணையாமல் பிரகாசிக்கச் செய்வார்.

"இருளிலே நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது" (ஏசா 9:2).

உயிர் அடையுமா?

“மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு நான் கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றேன்” (எசேக் 37:3).

ஒரு பக்கத்தில் உலர்ந்த எலும்புகள் திரளாய் கிடக்கின்றன. மறுபக்கத்தில் கர்த்தர் நிற்கிறார். இரண்டிற்கும் மத்தியில்தான் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நிற்கிறோம்.

உலர்ந்த எலும்புகளைச் சுட்டிக்காட்டி, கர்த்தர் நம்மைப் பார்த்து, “இந்த எலும்புகள் உயிரடையுமா?” என்று கேட்கிறார்.

நம் தேசத்தின் நிலைமையைப்பாருங்கள். கிறிஸ்து அற்றவர்களாக, மாறுதலற்றவர்களாக, பலப்பல நூற்றாண்டுகளாக உலர்ந்த எலும்புகளாகவே கிடக்கிறார்கள்.

தங்களை சிருஷ்டித்தவர் யார்? தங்களை இரட்சிக்கிறவர் யார்? என்று அவர்களுக்குத் தெரியவில்லை! பிரச்சனைகளோடு புலம்பி இருளிலே புழுக்களைப் போல, “யார் எங்களுக்கு ஆறுதல் செய்வார்?” என்று அங்கலாய்க்கிறார்கள்!

மறுபக்கம் நாம் கிறிஸ்துவைப் பார்க்கிறோம். உலர்ந்த எலும்புகளை உயிர்ப்பிக்க வல்லமையுள்ளவர் அவர். தாகமுள்ள ஜனங்களுக்கு ஜீவ தண்ணீரைத் தருகிறவர் அவர். வறண்ட நிலத்தில் இருந்து ஆறுகளை ஓடப் பண்ணுகிறவர் அவர். அவரே சகல நன்மைக்கும் ஊற்றுக்காரணர்.

தேவை நிறைந்த உலகத்துக்கும், வல்லமையுள்ள கர்த்தருக்கும் மத்தியிலே நாம் நின்றுக் கொண்டிருக்கிறோம்.

ஏறக்குறைய நூற்றாண்டுகளுக்கு முன்பு கால்டுவெல், மெர்காசீஸ், போப்ஐயர், ராக்லண்டு துரை போன்ற மிஷனெரிகள் தமிழகத்துக்கு வந்தபோது இங்குள்ள ஜனங்

களைப் பார்த்து எலும்புகளாகக் கண்டது மட்டுமல்ல, கிறிஸ்துவினுடைய வல்லமையினால் உயிர்ப்பிக்கவும் செய்தார்கள்.

அந்த பரிசுத்தவான்கள் விட்டுச்சென்ற பணியிலே இன்று நாம் நின்றுகொண்டிருக்கிறோம். இன்று நாம் உலர்ந்த எலும்புகளை உயிர்ப்பிக்கும்படி விசுவாசத்தோடு நிற்கிறோமா? நம்முடைய வெளிச்சம் இருளிலே பிரகாசிக்கிறதா? சற்று சிந்தித்துப் பாருங்கள்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி எலும்புகளின் பள்ளத்தாக்கில் நின்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தப் போது எலும்புகளின் மத்தியிலே ஒரு பெரிய அசைவு ஏற்பட்டது. வேதம் சொல்லுகிறது: ''ஒரு இரைச்சல் உண்டாயிற்று! இதோ அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்து கொண்டது'' (எசேக் 37:7).

இது அல்லவா எழுப்புதல்! இது அல்லவா உயிர் மீட்சி! தேவனற்ற சமுதாயத்திலே ஒரு பெரிய அசைவை ஏற்படுத்தும்படியாக கர்த்தர் உங்களைத் தெரிந்துக் கொண்டிருக்கிறாரே!

தேவபிள்ளையே, உலர்ந்து கிடக்கிற சபைகளிலே, குடும்பங்களிலே, தேசத்திலே ஒரு பெரிய உயிர் மீட்சி ஏற்பட கர்த்தருடைய பட்சத்தில் நிற்பாயாக? கர்த்தருக்காக வைராக்கியமாக ஊழியம் செய்வாயாக? கர்த்தருடைய உயிர்ப்பிக்கிற வல்லமையை உலர்ந்த எலும்புகளுக்கு உரைப்பாயாக.

நாயீனூர் விதவையின் மகனை உயிர்ப்பித்த ஆண்டவர், யவீரு மகளை உயிரோடு எழுப்பின ஆண்டவர், லாசருவை கல்லறையிலிருந்து, ''வெளியே வா'' என்று அழைத்த ஆண்டவர், உலர்ந்துபோன நம் தேசத்தில் உயிர் மீட்சி தர வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

ஒரு காலத்தில் உலர்ந்த எலும்புகளைப் போல பல தேசங்களில் சிதறிக்கிடந்த இஸ்ரவேலர்கள் மத்தியில்

பெரிய அசைவுண்டானது. 1947 ஆம் ஆண்டு அவர்கள் ஒன்றாய் கூடினார்கள். தனிதேசமாக காலூன்றி நின்றார்கள். ''உலர்ந்த எலும்புகள் உயிரடையும்'' என்ற தீர்க்கதரிசனத்திற்கு சாட்சிகளானார்கள். ஆசிக்குரிய இஸ்ரவேலே, நீ உயிர்ப்பிக்கப்படுவாயாக!

''நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்''

(யோவான் 11:25

உயிர்ப்பிக்க மாட்டீரோ?

"உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்க மாட்டீரோ?" (சங் 85:6).

இந்த நாட்கள் கர்த்தர் நம்மை உயிர்ப்பிக்கிற நாட்கள். தேசத்தில் எழுப்புதலை கட்டளையிடுகிற நாட்கள். உலர்ந்த எலும்புகள் உயிரடைகிற நாட்கள். அல்லேலூயா!

இந்த எழுப்புதலை நாம் அனுபவிக்க வேண்டுமென்றால், இந்த எழுப்புதலின் மூலம் தேசம் சந்திக்கப்பட வேண்டுமென்றால், நாம் விடாப்பிடியாக எழுப்புதலுக்காக, ஒரு பின்மாரியின் மழை ஊற்றப்படுவதற்காக தேவனிடத்திலே ஊக்கமாக மன்றாட வேண்டும்.

சகரியா தீர்க்கதரிசி சொல்கிறார்: "பின்மாரி காலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள்; அப்பொழுது கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி, வயல் வெளியில் அவரவருக்குப் பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார்" (சகரி 10:1).

ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களில் ஒரு பெரிய பின்மாரி ஊற்றப்பட்டது. காரணம் ஆதி அப்போஸ்தலர்களும், சீஷர்களும், விசுவாசிகளும் ஒருமனதோடு தேவ சமுகத்திலே காத்திருந்து ஜெபிக்கலானார்கள். அவர்கள் ஜெபித்தபோது அந்த இடம் அசைந்தது என்று வேதம் சொல்லுகிறது.

பின்மாரி ஊற்றப்பட்ட அனுபவத்தை அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் வாசித்துப் பாருங்கள். எருசலேமில் மேல்வீட்டறையில் நூற்றியிருபது பேர் சேர்ந்து ஒருமனமாக ஊக்கமாக ஜெபித்து வந்தார்கள். அப்பொழுது ஒரு பெரிய எழுப்புதலின் நதி அக்கினியாய் அவர்கள் மத்தியில் ஊற்றப்பட்டது.

ஒவ்வொருவரும் விசுவாச வீரர்களானார்கள். கர்த்தருக்காய் தைரியமாய் சாட்சி கொடுத்தார்கள். அனுதினமும் மூவாயிரம், ஐயாயிரம் என்று ஜனங்கள் சபையிலே சேர்க்கப்பட்டார்கள்.

எழுப்புதலைத் தொடர்ந்து அற்புதங்கள் அடையாளங்கள் ஒவ்வொருநாளும் நிகழ்ந்தன. எழுப்புதலின் ஒரு பகுதிதான் அற்புதங்கள். நிச்சயமாகவே அற்புதங்களைச் செய்கிற தேவன் இன்றைக்கும் ஜீவனோடு இருக்கிறார்.

அற்புதங்கள் நடைபெறுகிற காலம் முடிவடைந்து போய்விடவில்லை. அற்புதங்களைச் செய்கிற வல்லமையை வரமாகவே ஆண்டவர் பரிசுத்த ஆவியானவர் மூலமாக நமக்குத் தந்திருக்கிறார் (I கொரி 12:10).

அப்போஸ்தலனாகிய பேதுரு, பிறவி சப்பாணியைப் பார்த்தவுடன் அவனை உயிர்பிக்கிற வல்லமை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இருக்கிறது என்பதை உணர்ந்து, அவனைப் பார்த்து, ''என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் நீ எழுந்து நட என்று சொல்லி வலது கையினால் பிடித்து அவனை தூக்கிவிட்டான். உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது'' (அப் 3:6).

தேவபிள்ளையே, நீ கர்த்தருக்காக பெரிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். அதுவே கிறிஸ்துவின் வாஞ்சையும் தாகமுமாயிருக்கிறது.

''என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்'' (யோவான் 14:12). கர்த்தருக்காக பெரிய பெரிய கா்ரியங்களை திட்டமிட்டு செயலாற்றுவாயாக.

அப்போஸ்தலர் நாட்களில் ஊற்றப்பட்ட முன்மாரியையும், எழுப்புதலையும், அற்புதங்களையும் தொடர்ந்து பாடுகளும் கூட வந்தன.

பிரதான ஆசாரியனும், பரிசேயனும், கிறிஸ்துவின் மந்தைக்கு விரோதமாய் எழும்பி, இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

ஆனால் அதற்கு பேதுருவின் பதில் என்ன தெரியுமா? ''தேவனுக்குச் செவி கொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே என்றார்கள்'' (அப் 4:20).

''என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள், நான் உங்களை தேசத்தில் வைப்பேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்; இதைச் சொன்னேன், இதைச் செய்வேன்'' (எசே 37:14).

அத்தியாயம் 19

தேசமே, பயப்படாதே!

''தேசமே பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்'' (யோவேல் 2:21).

நாம் வாழுகிற இந்த நாட்கள் எழுப்புதலின் நாட்கள். கர்த்தர் பெரிய காரியங்களைச்செய்கிற நாட்கள். சரித்திரத்திலே இதுவரையிலும் இல்லாத பின்மாரி ஊற்றப்படுகிற நாட்கள்.

தேவபிள்ளையே, மகிழ்ந்து களிகூருவாயாக. கர்த்தர் உன் தேசத்திலும் வீட்டிலும் பெரிய காரியங்களைச் செய்வார்.

எழுப்புதலில் 1. ஆசாரியர்கள் செய்ய வேண்டிய கடமை உண்டு. 2. தாய்மார்களுக்குரிய உத்திரவாதம் உண்டு. 3. வாலிபர் செய்ய வேண்டிய காரியங்களும் உண்டு.

1. **ஆசாரியர்களே:-** ''ஆசாரியர்களே, இரட்டுடுத்திப் புலம்புங்கள்; பலிபீடத்தின் பணிவிடைக்காரரே, அலறுங்கள், என் தேவனுடைய தொண்டரே, நீங்கள் உள்ளே பிரவேசித்து இரட்டுடுத்தவர்களாய் இராத்தங்குங்கள்'' (யோவேல் 1:13).

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எழும்பட்டும். கர்த்தர் மேல் உண்மையான அன்பு உள்ளவர்கள் ஒன்று சேரட்டும். பெரிய எழுப்புதலுக்காக கையோடு கை கோர்த்து தோளோடு தோள் நின்று ஒருமனமாகட்டும்.

''பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். மூப்பரையும் தேசத்தின் எல்லாக் குடிகளையும் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தில் கூடி வரச் செய்து கர்த்தரை நோக்கி கூப்பிடுங்கள்'' (யோவேல் 1:14).

''என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்'' என்று கர்த்தர் உறுதியாய் வாக்கு அளிக்கிறார் (II நாளா 7:14).

இந்த நாட்கள் கர்த்தர் ஏராளமான ஊழியர்களை எழுப்புகிற நாட்கள். ஆவியின் வரங்களையும் வல்லமைகளையும் பொழிந்தருளுகிற நாட்கள். தேவனுடைய ஊழியக்காரர்கள் ஒன்றுபட்டு மன்றாட வேண்டிய நேரம் இது!

2. **தாய்மார்களே:-** தெபோராள் இஸ்ரவேலருக்கு ஒரு தாயாக எழும்பினாள். ''தெபோராளாகிய நான் எழும்புமளவும், இஸ்ரவேலிலே நான் தாயாக எழும்புமளவும், கிராமங்கள் பாழாய் போயின; இஸ்ரவேலின் கிராமங்கள் பாழாய் போயின'' (நியா 5:7) என்றாள்.

இன்று இந்தியாவில் ஏழு லட்சம் கிராமங்கள் உண்டு இந்த கிராமங்களில் எழுபது கோடி மக்கள் உண்டு அவர்களுக்காக பரிதபித்து ஜெபிக்கும் ஜெப தாய்மார்களின் கையில் அல்லவோ அவர்களது இரட்சிப்பு இருக்கிறது!

எஸ்தரே கர்த்தருக்காக எழும்புவாயாக! ''நீ இந்த காலத்தில் மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்'' (எஸ்தர் 4:14).

3. **வாலிபர்களே:-** உங்கள் வாலிபம் யாருக்காக? உலகத்திற்காகவா? அல்லது கிறிஸ்துவுக்காகவா? உன் வாலிப பிராயத்தை சிற்றின்பங்களுக்காக செலவழிப்

பாயா? அல்லது கர்த்தருடைய ஊழியத்திற்கென்று செலவழிப்பாயா?

வாலிபம் மாயை என்று அறிந்துகொள். வாலிபத்தின் பெலனும் மாயை என்பதை அறிந்துகொள். ''உன் வாலிப பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை'' என்று வேதம் சொல்லுகிறது (பிரசங்கி 12:1).

நீ கர்த்தருக்காக எழும்புவாயென்ருல் கர்த்தர் உன்னை உபயோகிக்க ஆவலோடிருக்கிருர். உனக்கு வரங்களையும் வல்லமைகளையும் தருவதற்கு அவர் ஆயத்தமாயிருக்கிருர்.

அவர் உன்னைப் பார்த்து சொல்லுகிருர்: ''என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்'' (யோவா 14:12).

''நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்'' (சங் 32:8).

கெம்பீரத்தோடே அறுப்பாய்!

"கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித் தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுது கொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்து கொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்" (சங் 126:5,6).

அல்லேலூயா! நாம் கெம்பீரத்தோடே அறுப்போம். நல்ல அறுவடையை நம்முடைய தேவன் கட்டளையிடுவார். நம் அருமை இரட்சகரின் தோட்டத்திலே கர்த்தருடைய பணிவிடைக்காரர்களாயிருப்பது நமக்கு எத்தனை பெரிய பாக்கியம்!

இம்மைக்குரிய அறுவடைகளும் உண்டு; நித்தியத்திற்குரிய அறுவடைகளும் உண்டு; தற்காலிகமான அறுவடையும் உண்டு; என்றென்றுமுள்ள அறுவடையும் உண்டு!

வேதம் சொல்கிறது: "கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்" (I கொரி 15:43).

கிறிஸ்துவினுடைய வருகையின் நாளிலே ஒரு பெரிய அறுவடையை நாம் எதிர்ப் பார்க்கிறோம். அறுப்பு உலகத்தின் முடிவு. அறுக்கிறவர்கள் தேவதூதர்கள்.

வேதம் சொல்லுகிறது: வலுவாய்த் தொனிக்கும் எக்காளச் சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்" (மத் 24:31).

கிறிஸ்துவினுடைய வருகையின் போது உலகமெங்கும் உள்ள கோதுமை மணிகளான பரிசுத்தவான்களை தேவ

தூதர்கள் ஒன்று கூட்டி மத்திய ஆகாயத்திற்கு எடுத்துச் செல்வது எத்தனை மகிமையானதாயிருக்கும்!

தேவ பிள்ளையே, நாம் கெம்பீரமாய் அந்த நாட்களில் காணப்படவேண்டுமென்றால் கெம்பீரமான அறுவடையில் காணப்படவேண்டுமென்றால் நாம் கண்ணீரோடு விதைக்கிறவர்களாய் இருக்க வேண்டும். டாக்டர் பி. ஏ. டாரி என்ற பக்தன் ஒரு நிகழ்ச்சியை எழுதுகிறார்.

''எனக்கு ஒரு ஊழியரைத் தெரியும். அவர் பெயர் கலோனல் கிளார்க். ஒவ்வொரு நாளும் வேலைக்காகபோய் திரும்பி வந்ததும் ஊரின் எல்லையிலுள்ள சமுகக் கூடத்தை எடுத்துக் கூட்டங்களை நடத்துவார்.

ஒவ்வொரு நாளும் குடிகாரர், திருடர், ரவுடிகள், சூதாட்டக்காரர் கண்ணீரோடு கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுப்பது உண்டு. அவருடைய பிரசங்கமும் உப்புச் சப் பில்லாமல் சாதாரணமாக இருந்தாலும் கூட முடிவில் பரிசுத்தாவியானவரின் வல்லமையான கிரியை காணப்படும்.

காரணம் என்ன தெரியுமா? அழும் அவருடைய கண்கள் தான். அந்தரங்கத்தில் அழுவார், ஜெபத்தில் அழுவார், பிரசங்கத்தில் அழுவார், மக்களுக்கு கொடுக்கும் ஆலோசனையிலும் அழுவார்.

ஆரம்பத்தில் கண்ணீர் விடுவது அவருக்கு அவமானம் என்று தன் கண்ணீரை அடக்கி வைக்க முயற்சித்தார். ஆனால் அந்த நாட்களில் ஆவியானவரின் கிரியைகள் இல்லை. கூட்டங்கள் மிகவும் தோல்வியடைந்தன.

அன்று இரவே, '' தேவனே, கண்ணீரின் ஆவியை எனக்குத் தாரும்'' என்று கதறி அழுதார். நொறுங்குண்ட இருதயத்தையும், விண்ணப்பத்தின் ஆவியையும், கண்ணீரின் மன்றாட்டையும் பெற்றுக் கொண்டார்.

கண்ணீர் அவமான சின்னம் அல்ல. அது தேவ பெலத்தின் சின்னம்! கிறிஸ்துவின் முன்மாதிரியின் சின்னம்! தேவ

பிள்ளையே, நீ கண்ணீரோடு விதைத்தால் கெம்பீரத் தோடே அறுப்பாய்.

''அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப் பார்; இனி மரணமுமில்லை. வருத்தமுமில்லை; முந்தினவை கள் ஒழிந்து போயின'' (வெளி 21:4).

மனம் விட்டு உங்களோடே...!

இந்தப் புத்தகத்தின் மூலமாக உங்களைச் சந்திக்க கிருபை செய்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

கர்த்தர் என்னை புத்தக ஊழியத்திற்கு அழைத்த நாள் முதற்கொண்டு புத்தகத்தை எழுதுவதற்கு உதவும் கரங்களை கூடவே எழுப்பினர். இதற்காக தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன். ஆவிக்குரிய புஸ்தகங்கள் தேசத்திலே எழுப்புதலையும், உயிர்மீட்சியையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இந்தப் புத்தகம் எழுதுவதற்கு உதாரத்துவமாய்க் கொடுத்த ஒரு அருமையான குடும்பத்திற்காக ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நான் குவைத் தேசத்துக்கு சென்றிருந்தபோது அந்த சகோதரனையும் குடும்பத்தினரையும் முகமுகமாய்ச் சந்திக்க கர்த்தர் கிருபை செய்தார். அவர்களுடைய உதாரத்துவமான காணிக்கையினுல் இந்தப் புத்தகம் வெளிடப்பட ஏதுவாயிற்று.

Mr.& Mrs. Hazlitt Simeon & Family,
Kuwait.

இந்தப் புத்தகத்தினுல் வரும் ஒவ்வொரு ஆசீவாதங்களும் அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தினரையும் சேருவதாக. கர்த்தர்தாமே வானத்தின் பலகணிகளைத் திறந்து விசேஷித்த விதமாய் ஆசீர்வதிப்பாராக.

இந்தப் புத்தகத்திற்கு ஓய்வு தர வேண்டாம். குறைந்தது 50 பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை புது புத்தகங்களை மலரச் செய்யும்!

ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்துமா பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 100 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந் நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1965 ஆண்டு [illegible] இறங்கினார். [illegible] மேடைப் பேச்சிலும் எழுத்து ஊழியத்திலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாளர்.

புத்தக ஊழியத்தை தாங்குங்கள். அநேக ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

புத்தகங்கள் கிடைக்கும் இடம் :
J. சாம்ஜெபத்துரை, M.A.,
50, [illegible] ரோடு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.